# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2023.07.19 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல்

**சட்டத் தொழிலில் உயர் புகழையும் உயர் தராதரத்தினையும் வெளிப்படுத்தி அறிவுறுத்தும் சட்டத்தரணிகளாக தொழில்புரிகின்ற சட்டத்தரணிகளால் வழங்கப்பட்ட சேவையை ஏற்றங்கீகரித்து பாராட்டும் நோக்குடன் சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளிப்பதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல்

*ச.வ.ஓ. 13/2023*

**சட்டத் தொழிலில் உயர் புகழையும் உயர் தராதரத்தினையும் வெளிப்படுத்தி அறிவுறுத்தும் சட்டத்தரணிகளாக தொழில்புரிகின்ற சட்டத்தரணிகளால் வழங்கப்பட்ட சேவையை ஏற்றங்கீகரித்து பாராட்டும் நோக்குடன் சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளிப்பதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டமூலம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகளுக்கான கௌரவத்தினை அளித்தல்

**2.** (1) அதிமேதகு சனாதிபதி, பிரதம நீதியரசர் மற்றும் நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அவதானங்களைப் பெற்றதன் பின்னர், பின்வரும் தகைமைகளுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உயர்நீதிமன்றத்தின் எவரேனும் ஒரு சட்டத்தரணிக்கு சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணி எனும் கௌரவத்தினை அளிக்கலாம்:-

(அ) அத்தகைய கௌரவத்தினை வழங்குகின்ற திகதியன்றுள்ளவாறு முப்பத்தைந்து ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு அறிவுத்தும் சட்டத்தரணியொருவராக முனைப்பான தொழிலிருப்பவராக விருத்தல் வேண்டும்;

(ஆ) சட்டத்தொழில் உயர் புகழை அடைந்திருப்பதுடன் உயர் நடத்தை தராதரங்களையும் தொழில் நேர்மையினையும் பேணியிருப்பவராகவிருத்தல் வேண்டும்;

(இ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றவியல் தவறுக்குக் குற்றவாளியாகக் காணப்படாதவராக இருத்தல் வேண்டும்;

(ஈ) 1988 ஆம் ஆண்டின் உயர்நீதிமன்ற (சட்டத்தரணிகளது நடத்தை மற்றும் ஒழுக்கம்) விதிகள் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறை சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எவையேனும் தொழிலாண்மைசார் துர்நடத்தைகளுக்கு குற்றவாளியாகக் காணப்படாதவராகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(உ) நன்னடத்தைகளும் புகழும் வாய்ந்த ஆளாகவிருத்தல் வேண்டும்.

(2) அதிமேதகு சனாதிபதி அவர்கள், எவரேனும் அறிவுறுத்தும் சட்டத்தரணிக்கு சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணி என்னும் கௌரவத்தினை அளிப்பதன்மேல் அத்தகைய அறிவுறுத்தும் சட்டத்தரணிக்கு அப்பொருள்பட்ட சான்றிதழொன்றைக் கையளித்தல் வேண்டும்.

பொருள் கோடல்

**3.** இச்சட்டம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி:-

"அறிவுறுத்தும் சட்டத்தரணி" என்பது, அத்தகைய சட்டத்தரணியின் அறிவுறுத்தல்களின்மீது நீதிமன்றத்தில் தோன்றுவதற்கு சட்டவுரைஞர் ஒருவருக்கு அறிவுறுத்துவதனை பிரதான தொழிலாக கொண்டவரான சட்டத்தரணியொருவர் எனப் பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.